முருகப்பெருமான் துணை

**மகான் கணராமர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.10.2022**, புதன்கிழமை

1. தருமனே ஞானத்தலைவனின்
தவபலமாக வந்த ஞானியே
ஆறுமுக அரங்கனே உமை வாழ்த்தி
அனுகூல ஆசிதனை கணராமர் யானும்
2. யானும் சுபகிருது துலை திங்கள்
உயர்வான ஈர்திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 02 ம் நாள் 19.10.2022, புதன்கிழமை)
ஞானம்பட உலகம் நன்மைபெற
நாட்டிடுவேன் அரங்கஞானி கேட்க
3. கேட்கவே அஞ்ஞான சக்திகளால்
கேடதுவும் தீவினையாகப் பரவி
கட்டமதும் தேசமெல்லாம் நிலவ
கண்ணியமிலா வன்கொடுமை நடக்க
4. நடக்கவே எங்கும் எதிலும்
நியாயமிலா ஊழல் கொடுமை
இடரென சகலத் துறைகளிலும்
இன்னலாய் வளர்ந்து நிற்க
5. நிற்கவே நீதி காக்கப் படா
நிதிக்கு அடிமையாய் முடங்க
ஏற்றமிலா இந்த அவலங்கள்
இனியும் தொடராது இருக்க
6. இருக்கவே கலியுகமக்கள் தானும்
ஏழாம் படைவீடு நோக்கியே
கருத்தாக வந்து இனிதே
கருணைமிக்க அரங்கனை போற்றி
7. போற்றியே புண்ணிய வழி தேடி
புதுமை தரும் திருவடி தீட்சை
ஆற்றல்பட ஏற்று வணங்கி
அனுதினமும் பூசை தொடர
8. தொடரவே ஞான பலமாக
தேசிகன் வழி குருவருள் பெருகி
இடரை கலியின் கொடுமைகளை
இனி தொடரா அகற்றும் பலம் கூடி
9. கூடியே ஞானவான்கள் படை
குவலயம் எங்கிலும் நிரப்பி
தேடியே அனைவரும் இணைய
தேசிகன் தேடல் வழி ஞானிகளாக

10. ஆகவே உலகோர் சிறந்து
அகிலத்தை மாற்றும் வண்ணம்
மிகைபட வளர்ச்சிநிலை கண்டு
மேலான ஞானவான்கள் தலைமை

11. தலைமை பெருகி இனிதே
தரணியே ஞான ஆட்சி
தலைவன் முருகப்பெருமான் ஆட்சியாக
தவராஜன் நோக்கமாக நிறைவேறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–